உ

ஓம் ஸ்ரீ

कनकाञ्जलिभिर्मुक्तैः कल्पसूत्र विसधायिभि: |
समलंकृत मूर्धानं सत्याषाढमुपास्महे ||

கநகாஞ்ஜலிபிர்முக்தை: கல்பஸூத்ர விதாயிபி:
ஸமலங்க்ருத மூர்த்தாநம் ஸத்யாஷாடமுபாஸ்மஹே||

ஸ்ரீ ஸத்யாஷாட குரு சரணாரவிந்தாப்யாம் நம:

## 1. நூதன யஜ்ஞோபவீத தாரணம் :

*(புதிய பூணூல் மாற்றிக் கொள்ளுதல்)*

*(உபநயனத்திற்கு பிறகு ஒருவர் தன் உடலில் தரிக்கவேண்டியது பூணூல். அது மிகவும் அழுக்கடைந்தாலோ, அறுந்து போனாலோ புதியது மாற்றிக் கொள்ள வேண்டும். பூணூல் இல்லாமல் ஒரு பொழுதும் இருக்கக் கூடாது)*

**தேவையான சாமான்கள்:–** *(ப்ரம்ஹசாரிக்கு ஒரு வடம் பூணூல். விவாஹமானவருக்கு இரண்டு வடம். அதிக வைதீக ச்ரத்தையுடையவரானால் மூன்று வடம். விபூதி, பஞ்சபாத்ரம் உத்ரணி தீர்த்தத்துடன், ஆஸனம்)*

*(பூணூல் அணிபவர் காலையில் ஸ்நானம் செய்து மடி வஸ்த்ரமணிந்து விபூதி திலகமிட்டுக் கொண்டு கிழக்கு முகமாக உட்கார்ந்து ஆசமனம் செய்யவும்)* அச்யுதாய நம: அநந்தாய நம: கோவிந்தாய நம: *(என்று சொல்லி ஓர் உத்ரணி ஜலம் கையில் விட்டு சாப்பிடவும். ஒருமுறை ஜலத்தால் உதட்டை துடைக்கவும். பிறகு)* கேசவ, நாராயண *(என்று வலது கட்டை விரலால் முறையே வலது இடது கன்னத்தை தொடவும்)* மாதவ, கோவிந்த *(என்று பவித்ரவிரலால் வலது இடது கண்ணைத் தொடவும்)* விஷ்ணோ,

மதுஸூதன *(என்று ஆள்காட்டி விரலால் மூக்கின் வலது இடது புறத்தை தொடவும்)* த்ரிவிக்ரமா, வாமன *(என்று சுண்டு விரலால் வலது இடது காதைத் தொடவும்)* ஸ்ரீதர, ஹ்ருஷீகேச *(என்று நடுவிரலால் வலது இடது தோள்பட்டையை தொடவும்)* பத்மநாப *(என்று எல்லா விரல்களாலும் நாபியை தொடவும்)* தாமோதர *(என்று எல்லா விரல்களாலும் தலையை தொடவும்)*

*(பிறகு)* சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸந்நவதநம் த்யாயேத் ஸர்வவிக்ந உபசாந்தயே *(என்று இரண்டு பொட்டுகளுக்கும் மேல் தலையில் குட்டிக் கொள்ளவும். பிறகு ஒரு ப்ராணாயம் செய்யவும்)* ஓம் பூ: ஓம் புவ: ஓகும் ஸுவ: ஓம் மஹ: ஓம் ஜந: ஓம் தப: ஓகும் ஸத்யம், ஓம் தத்ஸவிதுர்வரேண்யம்| பர்கோ தேவஸ்ய தீமஹி| தியோயோந: ப்ரசோதயாத்| ஓமாபோ ஜ்யோதீரஸோ அம்ருதம் ப்ரம்ஹ பூர்புவஸ்ஸுவரோம்|| *(என்று வலது கையை மூக்கின் இருபுறமும் வைத்து மூச்சை இழுத்து வெளியே விட்டு கையால் வலது காதை தொடவும்)*

**பிறகு ஸங்கல்பம்:–** *(வலது தொடை மேல் இடது உள்ளங்கையை வைத்து வலது உள்ளங்கையால் மூடி வைத்து கொண்டு சொல்லவேண்டும்)* மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்தம் மம ஸமஸ்த பாபக்ஷயார்த்தம் ச்ரௌத ஸமார்த்த விஹித நித்ய கர்மானுஷ்டான யோக்யதா ஸித்யர்த்தம் ப்ரம்ஹ தேஜோபிவ்ருத்யர்த்தம் யஜ்ஞோபவீத தாரணம் கரிஷ்யே| அப உப ஸ்ப்ருச்ய *(என்று கையால் தீர்த்தத்தை தொடவும். பிறகு)* அஸ்ய ஸ்ரீ யஜ்ஞோபவீத–தாரண மஹாமந்த்ரஸ்ய பரப்பரம்ஹ ருஷி: *(என்று வலது கையால் சிரஸை தொடவும்)* த்ருஷ்டுப்ச்சந்த: *(என்று உதட்டை தொடவும்)* பரமாத்மா தேவதா *(என்று



ஹ்ருதயத்தை தொடவும்)* யஜ்ஞோபவீத தாரணே விநியோக: *(என்று சொல்லவும்)*

**பூணூல் தரிக்க:–** *(பஞ்சபாத்ரம் மீது உத்ரணியை தீர்த்தத்துடன் குறுக்காக வைத்து ஒரு வடம் பூணூல் ப்ரம்ஹமுடிச்சு மேல்புறம் இருக்கும்படி வலது கையால் தூக்கிப் பிடித்து இடது கையால் பூணூலை உத்ரணி ஜலத்தில் படும்படி வைத்துக்கொண்டு)* ஓம் யஜ்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ரஜாபதே: யத்ஸஹஜம் புரஸ்தாத்| ஆயுஷ்யம் அக்ரியம் ப்ரதிமுஞ்ச சுப்ரம் யஜ்ஞோபவீதம் பலமஸ்து தேஜ: *(என்று தரிக்கவும். பிறகு ஓம் என்று ஜலத்தை தொடவும். ப்ரம்ஹசாரியை தவிர மற்றவர்கள் மற்றவடங்களையும் இதே விதம் அணியவும்)*

**அடுத்து பிரார்த்தனை:–** *(இருகைகளையும் கூப்பி)* யஜ்ஞஸ்ய உபவீதேந உபவ்யயாமி| தீர்காயுத்வாய ஸுப்ரஜாஸ்த்வாய ஸுவீர்யாய யசஸே ப்ரம்ஹனே ப்ரம்ஹவர்ச்சஸாய| ஸர்வேஷாம் வேதாநாம் ஆதிபத்யாய *(என்று அஞ்சலி செய்யவும்)*

**பிறகு பழைய பூணூலை கழற்றமந்தரம்:–** உபவீதம் பிந்ந தந்தும் ஜீர்ணம் கச்மல தூஷிதம் விஸ்ருஜாமி புநர் ப்ரம்ஹ வர்ச்சோ தீர்காயுரஸ்துமே *(என்று முடிவில் ஆசமனம்)*

## 2. ஸந்த்யாவந்தநம்

*(ஒருவர் தனக்கு உபநயனம், ப்ரம்ஹோபதேசம் ஆன அன்று பகல் தொடங்கி ஆயுள் பரியந்தம் செய்ய வேண்டிய நித்யகர்மா)*

**செய்யும் காலம்:–** *(காலை ஸுர்ய உதயத்திற்கு முன்பும், நடுபகலிலும், மாலை ஸுர்ய அஸ்தமனத்திற்கு முன்பும் தினசரி செய்ய வேண்டும்)*

**தேவையுள்ள சாமான்கள்:–** *(ஆஸனம், பஞ்சபாத்ரம் உத்ரணி, தாம்பாளம், விபூதி, தீர்த்தம்)*

**காலையில்:–** *(பல்துலக்கி முகம் கழுவிய பிறகு அல்லது ஸ்நானம் செய்த பிறகு விபூதி தரித்து கிழக்குமுகமாக அமர்ந்து ஆசமனம் செய்யவும்)* அச்யுதாய நம: அநந்தாய நம: கோவிந்தாய நம: *(என்று மூன்று தரம் தீர்த்தப்ராசனம்)* கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணோ, மதுஸுதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷிகேச, பத்மநாப, தாமோதர *(என்று அங்கங்களை தொடவும். அடுத்து ஒரு ப்ராணாயாமம் செய்யவும்)* ஓம் பூ : ஓம் புவ: ஓகும் ஸுவ: ஓம் மஹ : ஓம் ஜந: ஓம் தப: ஓகும் ஸத்யம் ஓம் தத்ஸ விதுவர்ரேண்யம்| பர்கோ தேவஸ்ய தீமஹி| தியோயோந: ப்ரசோதயாத்| ஓமாபோ ஜ்யோதீரஸ: அம்ருதம் ப்ரம்ஹ பூர்புவஸ்ஸுவரோம் *(என்று கைவிரலால் நாசியின் இருபுறமும் வைத்து மூச்சு இழுத்து விடவும்)*

**ஸங்கல்பம்:–** *(வலது துடை மீது இடது உள்ளங்கையை வைத்து வலது உள்ளங்கையால் மூடி வைத்துக் கொண்டு)* மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் *(காலையில்)* ப்ராதஸ்ஸந்த்யாம் உபாஸிஷ்யே *(பகலில்)* மாத்யாந்ஹிகம் கரிஷ்யே, *(மாலையில்)* ஸாயம் ஸந்த்யாம் உபாஸிஷ்யே என்று சொல்ல வேண்டும்.



*(பிறகு ஒரு உத்ரணி தீர்த்தம் எடுத்து அதில் ஓம் என்று மோதிர விரலால் எழுதி நெற்றியில் இட்டுக் கொள்ளவும்)*

**மார்ஜனம் (தீர்த்தப்ரோக்ஷணம்):–** ஓம் ஆபோஹிஷ்டா மயோபுவ: தாந ஊர்ஜேததாதந| மஹேரணாய சக்ஷஸே| யோவ: சிவதமோ ரஸ: தஸ்ய பாஜ யதேஹந: உசதீரவ மாதர: தஸ்மா அரங்கமாவவ: யஸ்ய க்ஷயாய ஜிந்வத| ஆபோ ஜநயதாசந: *(என்று சிறிது சிறிது தீர்த்தமெடுத்து தலையில் தெளித்துக்கொள்ளவும்)* ஓம் பூர்புவஸ்ஸுவ: *(என்று தீர்த்தத்தால் தன்னை ஒருமுறைசுற்றிக் கொள்ளவும்)*

**தீர்த்தப்ராசாநம்:–** *(கையில் தீர்த்தம் வைத்துக் கொண்டு – காலையில்)* ஸுர்யச்ச மா மந்யுச்ச மந்யுபதயச்ச மந்யுக்ருதேப்ய: பாபேப்யோ ரக்ஷந்தாம் யத்ராத்ரியா பாப மகார்ஷம் மநஸா வாசா ஹஸ்தாப்யாம் பத்ப்யாமுதரேண சிச்நா ராத்ரிஸ்ததவலும்பது| யத்கிஞ்ச துரிதம் மயி| இதமஹம் மாமம்ருத யோநௌ| ஸுர்யே ஜ்யோதிஷி ஜுஹோமிஸ்வாஹா| *(என்று சொல்லி கையிலுள்ள தீர்த்தத்தை அருந்தவும்) (பகலில்)* ஆபப்புநந்து ப்ருத்வீம் ப்ருத்வீ பூதா புநாது மாம்| புநந்து ப்ரம்ஹணஸ்பதி: ப்ரம்ஹ பூதா புநாது மாம்| யதுச்சிஷ்டம் அபோஜ்யம் யத்வா துச்சரிதம் மம| ஸர்வம் புநந்து மாமாபோ Sஸதாம்ச ப்ரதிக்ரஹக்குஸ்வாஹா|| *(என்று முன்போல ஜலம் அருந்தவும்) (மாலையில்)* அக்நிச்ச மா மந்யுச்ச மந்யுபதயச்ச மந்யுக்ருதேப்ய:| பாபேப்யோ ரக்ஷந்தாம்| யதந்ஹா பாபமகார்ஷம்| மநஸா வாசா ஹஸ்தாப்யாம்| பத்ப்யாமுதரேண சிச்நா| அஹஸ்ததவலும்பது| யத்கிஞ்ச துரிதம் மயி| இதமஹம் மாமம்ருத யோநௌ| ஸத்யே ஜ்யோதிஷி ஜுஹோமிஸ்வாஹா|| *(என்று ஜலம் அருந்தவும்)*

**மறுபடி தீர்த்தப்ரோக்ஷணம்:–** ததிக்ராவ்ண்ணோ அகாரிஷம்| ஜிஷ்ணோ ரச்வஸ்ய வாஜிந:| ஸுரபிநோ முகாகரத்|

ப்ரண ஆயுகும்ஷி தாரிஷத்| ஆபோஹிஷ்டா மயோபுவ:| தாந ஊர்ஜே ததாதந| மஹேரணாய சக்ஷஸே| யோவச்சிவதமோ ரஸ: தஸ்யபாஜ யதேஹந: உசதீரிவ மாதர: தஸ்மா அரங்கமாவவ:| யஸ்யக்ஷயாய ஜிந்வத| *(முழங்கால் ப்ரோக்ஷணம்)* ஆபோ ஜநயதாசந:| *(என்று சிறிது சிறிது ஜலம் தலையில் ப்ரோக்ஷித்துக் கொள்ளவும்)* ஓம் பூர்புவஸ்ஸுவ: *(என்று ஜலத்தால் ஒருமுறைதன்னை சுற்றிக் கொள்ளவும்)*

**பிறகு அர்க்யம் கொடுத்தல்:–** *(இரு கைகளிலும் கட்டை விரல் மற்றவிரல்களோடு சேராமல் ஜலம் வைத்துக் கொண்டு)* ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்ஸ விதுர்வரேண்யம்| பர்கோ தேவஸ்ய தீமஹி| தியோயோந: ப்ரஜோதயாத்| *(என்று சொல்லி காலை மாலையில் மூன்று முறையும் பகலில் இரண்டு முறையும் அர்க்யம் விடவும். காலை கிழக்கு நோக்கி பகலில் கிழக்கு/ வடக்கு நோக்கி மாலை மேற்கு நோக்கி நின்று கொண்டு அர்க்யம் விட வேண்டும்)*

*(ஸந்த்யாவந்தந காலம் தவறினால் ப்ராயச்சித்த அர்க்யம் விடும் முறை: வழக்கப்படி அர்க்யம் கொடுத்த பின் ஒரு ப்ராணாயமம் செய்து ஓர் அர்க்யம் விடவும்)*

*(பிறகு கையில் ஜலம் எடுத்து)* ஓம் பூர்புஸ்ஸுவ: அஸாவாதித்யோ ப்ரம்ஹ| ப்ரம்ஹைவ ஸத்யம்| ப்ரம்ஹைவாஹமஸ்மி| *(என்று சொல்லி தன்னை சுற்றி ஜலத்தை விட்டு இரு கைகளாலும் மார்பை தொட்டு காயத்ரி தேவதையை த்யானம் செய்யவும் பிறகு ஆசமனம் செய்க)*

**அடுத்து தர்பணம்:–** *(ஓர் உத்ரணி ஜலம் வலது உள்ளங்கையில் விட்டு ஒவ்வொரு மந்த்ரம் சொல்லி தர்பயாமி என்றவுடன் விரல்களின் நுனியால் தாம்பாளத்தில் விடவும்)*

ஓம் ஆதித்யம் தர்பயாமி| ஸோமம் தர்பயாமி| அங்காரகம் தர்பயாமி| புதம் தர்பயாமி| ப்ரஹஸ்பதிம் தர்பயாமி| சுக்ரம்



தர்பயாமி| சனைச்சரம் தர்பயாமி| ராஹும் தர்பயாமி| கேதும் தர்பயாமி| கேசவம் தர்பயாமி| நாராயணம் தர்பயாமி| மாதவம் தர்பயாமி| கோவிந்தம் தர்பயாமி| விஷ்ணும் தர்பயாமி| மதுஸூதநம் தர்பயாமி| த்ரிவிக்ரமம் தர்பயாமி| வாமநம் தர்பயாமி| ஸ்ரீதரம் தர்பயாமி| ஹ்ருஷீகேசம் தர்பயாமி| பத்மநாபம் தர்பயாமி| தாமோதரம் தர்பயாமி| *(பிறகு ஆசமனம் செய்து எழுந்திருக்கவும்)*

**ஸந்த்யாவந்தந ஜபம்:–** *(சுத்தமான இடத்தில் ஆஸனத்திலமர்ந்து எதிரில் தீர்த்த பாத்திரத்துடன் காலையில் கிழக்கு முகமாக பகலில் கிழக்கு/ வடக்கு முகமாகவும் மாலையில் மேற்கு முகமாகவும் நிமிர்ந்து உட்கார்ந்து மேல்வஸ்திரத்தை யஜ்ஞோபவீதமாக போட்டுக்கொண்டு ஜபம் செய்யவும்)*

சுக்லாம் ++ சாந்தயே *(என்று பொட்டுக்களில் குட்டிக் கொள்ளவும். அடுத்து ஒரு ப்ராணாயாமம் செய்யவும்)*

**பிறகு ஸங்கல்பம்:–** மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் *(காலை)* ப்ராதஸ்ஸந்த்யா காயத்ரி மஹாமந்த்ர ஜபம் கரிஷ்யே|| *(பகல்)* மாத்யாந்ஹிக காயத்ரி மஹாமந்த்ர ஜபம் கரிஷ்யே|| *(மாலை)* ஸாயம் ஸந்த்யா காயத்ரி மஹாமந்த்ர ஜபம் கரிஷ்யே|| *(என்று செய்து கொள்ளவும்)*

*(பிறகு ப்ராணாயாமம் 10 முறை செய்ய வேண்டும்)* ப்ரணவஸ்ய ருஷிர்ப்ரம்ஹ (என்று தலையிலும்) தேவீ காயத்ரீச்சந்த:|| *(என்று உதட்டிலும்)* பரமாத்மா தேவதா|| *(என்று மார்பிலும் கைவிரல்களால் தொடவும். மறுபடி)* பூராதி ஸப்த வ்யாஹ்ருதீநாம் அத்ரி ப்ருகு குத்ஸ வஸிஷ்ட கௌதம காச்யப ஆங்கீரஸாருஷய: *(என்று தலையிலும்)* காயத்ரீ உஷ்ணிக் அநுஷ்டுப் ப்ருஹதீ பங்க்தி த்ரிஷ்டுப் ஜகத்ய: சந்தாம்ஸி *(என்று உதட்டிலும்)* அக்நி: வாயு: அர்க்க வாகீச வருண இந்த்ர

விச்வேதேவா தேவதா: *(என்று மார்பிலும் கைவிரல்களால் தொடவும்)*

**ப்ரார்த்தனை:–** ஸாவித்ரியாருஷி: விச்வாமித்ர: தேவீகாயத்ரீ ச்சந்த: ஸவிதா தேவதா| காயத்ரீ சிரஸோ ப்ரம்ஹா ருஷி: அநுஷ்டுப்சந்த: பரமாத்மா தேவதா| ப்ராணாயாம ஜபே விநியோக:|| *(என்று ப்ராணாயாமம் செய்ய தொடங்கவும் – 10 முறை)*

**அடுத்து காயத்ரீ ஆவாஹந மந்த்ரம்:–** ஆயாது வரதா தேவி அக்ஷரம் ப்ரம்ஹ ஸம்மிதம்| காயத்ரீம் சந்தஸாம் மாதா இதம் ப்ரம்ஹ ஜுஷஸ்வந:| ஓஜோஸி ஸஹோஸி பலமஸி ப்ராஜோஸி தேவாநாம் தாம நாமாஸி விச்வமஸி விச்வாயு: ஸர்வமஸி ஸர்வாயு: அபிபூரோம் காயத்ரீம் ஆவாஹயாமி சாவித்ரீம் ஆவாஹயாமி ஸரஸ்வதீம் ஆவாஹயாமி *(என்று)* ஸாவித்ரியா ருஷி: விச்வாமித்ர: *(என்று தலை)* தேவீ காயத்ரீச்சந்த: *(என்று உதடு)* ஸவிதா தேவதா *(என்று மார்பு இவ்விடங்களை கை விரல்களால் தொட்டு)* காயத்ரீ மஹாமந்த்ர ஜபே விநியோக: *(என்று சொல்லவும்)*

**பிறகு த்யாநம்:–**

முக்தாவித்ரும ஹேமநீல தவளச்சாயைர் முகைஸ்த்ரீக்ஷணை:|
யுக்தாமிந்துகலா நிபத்தமகுடாம் தத்வார்த்த வர்ணாத்மிகாம்||
காயத்ரீம் வரதாபயாங்குச கசாச்சுப்ரம் கபாலம் கதாம்
சங்கம் சக்ரமாதரவிந்தயுகளம் ஹஸ்தைர்வஹந்தீம் பஜே||
யோ தேவஸ்ஸவிதா அஸ்மாகம் தியோ தர்மாதி கோசரா:
ப்ரேரயேத் தஸ்ய யத்பார்க: தத் வரேண்யமுபாஸ்மஹே||

**பிறகு காயத்ரீ ஜபம்:–** *(காலையில் நின்று கொண்டும் கைகளை மேல் வஸ்த்ரத்தில் மறைத்துக்கொண்டும் 108 முறை; பகலில் உட்கார்ந்தபடி 27 முறை; மாலை அதேவீதம் 54 முறைஜபம் செய்யவும்)*



**காயத்ரி மந்த்ரம்:–** ஓம் பூர்புவஸ்ஸுவ| தத்ஸ விதுர்வரேண்யம்| பர்கோ தேவஸ்ய தீமஹி| தியோயோந: ப்ரசோதயாத்|

**உபஸ்தாந மந்த்ரம்:–** *(காலை)* ப்ராதஸ்ஸந்த்யா காயத்ரீ உபஸ்தாநம் கரிஷ்யே| *(பகலில்)* மாத்யாந்ஹிக காயத்ரீ உபஸ்தாநம் கரிஷ்யே| *(மாலை)* ஸாயம் ஸந்த்யா காயத்ரீ உபஸ்தாநம் கரிஷ்யே|| *(என்று சொல்லி)* உத்தமே சிகரே ஜாதே பூம்யாம் பர்வத மூர்த்திநி| ப்ராம்ஹணேப்யோஹ்யநுஜ்ஞாதா கச்ச தேவியதாஸுகம்|| *(என்ற பூமியை தொடவும்)*

**தேவதா ப்ரார்த்தனை:–** *(காலை)* மித்ரஸ்ய சர்ஷணீத்ருத: ச்ரவோ தேவஸ்ய ஸாநஸிம்| ஸத்யம் சித்ரச்ரவஸ்தமம்| மித்ரோ ஜநாந் யாதயதி ப்ராஜாநந் மித்ரோ தாதார ப்ருத்வீ முதத்யாம்| மித்ர: க்ருஷ்டீ: அநிமிஷா அபிசஷ்டே ஸத்யாய ஹவ்யம் க்ருதவித்விதேம| ப்ரஸமித்ர மர்த்தோ அஸ்து ப்ரயஸ்வாந் யஸ்த ஆதித்ய சிக்ஷதி வ்ரதேந| ந ஹந்யதே ந ஜீயதே த்வோதோ நைநமகும்ஹோ அச்நோத்யந்திதோநதூராத்||

*(பகல்)* ஆஸத்யேந ரஜஸா வர்த்தமாநோ நிவேசயந் அம்ருதம் மர்த்யஞ்ச| ஹிரண்யயேந ஸவிதா ரதேநா ஆதேவோ யாதி புவநா விபச்யந்| உத்வயம் தமஸஸ்பரி பச்யந்தோ ஜ்யோதிருத்தரம். தேவம் தேவத்ரா ஸூர்யம் அகந்ம ஜ்யோதிருத்தமம்| உதுத்யம் ஜாதவேதஸம் தேவம் வஹந்தி கேதவ: த்ருசே விச்வாய ஸூர்யம்| சித்ரம் தேவாநாம் உதகாதநீகம் சக்ஷு: மித்ரஸ்ய வருணஸ்யாக்நே:| ஆப்ராத்யாவா ப்ருதிவீ அந்தரிக்ஷகும் ஸூர்ய ஆத்மா ஜகத: தஸ்துஷச்ச| தச்சக்ஷு: தேவஹிதம் புரஸ்தாத் சுக்ரமுச்சரத்| பச்யேம சரதச்சதம்| ஜீவேம சரதச்சதம்| நந்தாம சரதச்சதம்| மோதாம சரதச்சதம்| பவாம சரதச்சதம்| ச்ருணவாம சரதச்சதம்| ப்ரப்ரவாம சரதச்சதம்|

அஜீதாஸ்யாம சரதச்சதம்| ஜ்யோக்ச ஸூர்யம் த்ருசே| ய உதகாந் மஹதோ அர்ணவாந் விப்ராஜமாந: ஸரிரஸ்ய மத்யாத் ஸமா வ்ருஷபோ லோஹிதாக்ஷ: ஸூர்யோ விபச்சிந் மநஸாபுநாது||

*(மாலை)* இமம் மே வருண ச்ருதீ ஹவம் அத்யாச ம்ருடய| த்வாம வஸ்யுராசகே| தத்வாயாமி ப்ரம்ஹணா வந்தமாந:| ததாசாஸ்தே யஜமாநோ ஹவிர்பி: அஹேட மாநோ வருணேஹபோதி உருசகும் ஸமாந ஆயு: ப்ரமோஷீ:| யச்சித்தி தே விசோ யதா ப்ரதேவ வருண வ்ரதம்| மிநீமஸி த்யவி த்யவி| யத்கிஞ்சேதம் வருணதைவ்யே ஜநே அபித்ரோஹம் மநுஷ்யாச்சராமஸி| அசித்தி யத்தவ தர்மா யுயோபிம மா நஸ்தஸ்மாதேநஸோ தேவரீரிஷ:| கிதவாஸோ யத்ரி ரிபு: ந தீவி யத்வாகா ஸத்யமுதயந்ந வித்மா| ஸர்வாதாவிஷ்ய சிதிரேவ தேவாதா தேஸ்யாம வருணப்ரியாஸ:|| (என்று)

**திக்தேவதா வந்தநம்:–** *(மூன்று வேளையும்)* ஸந்த்யாயை நம:| ஸாவித்ர்யை நம:| காயத்ர்யை நம:| ஸரஸ்வத்யை நம:| ஸர்வாப்யோ தேவதாப்யோ நம:||

காமோ Sகார்ஷீந் மந்யுரகார்ஷீந் நமோ நம:||

**அபிவாதயே:–** *(ஒரு நமஸ்காரம் செய்து)* அபிவாதயே ++ ருஷய: ப்ரவராந்வித: .................. கோத்ர: .................. ஸூத்ர: யஜுச்சாகாத்யாயி .................. சர்மா நாமா அஹம் அஸ்மை போ: *(என்று சொல்லவும். பிறகு கிழக்கில் ஆரம்பித்து தெற்கு, மேற்கு வடக்கு நோக்கி அஞ்ஜலி செய்க)* ப்ராச்யை திசே நம:| தக்ஷிணாயை திசே நம:| ப்ரதீச்யை திசே நம:| உதீச்யை திசேநம:| ஊர்த்வாயை நம: *(என்று ஆகாசத்தை நோக்கி)* அதராயை நம: *(என்று பூமியை நோக்கி)* அந்தரிக்ஷாய நம: *(என்று மேலே)* பூம்யை நம: *(என்று கீழே)* ப்ரம்ஹணே நம: விஷ்ணவே நம: *(என்று நேரே அஞ்சலி செய்யவும்)*



*(தெற்கு நோக்கி சொல்லவும்)* யமாய தர்மராஜாய ம்ருத்யவேச அந்தகாயச| வைவஸ்வதாய காலாய ஸர்வபூத க்ஷயாய ச| ஔதும்பராய தத்நாய நீலாய பரமேஷ்டி நே| வ்ருகோதராய சித்ராய சித்ரகுப்தாய வை நம:| சித்ரகுப்தாய வை நமோநம:|| *(மேற்கு நோக்கி)* ருதகும் ஸத்யம் பரம் ப்ரம்ஹ புருஷம் க்ருஷ்ணபிங்களம் ஊர்த்வரேதம் விரூபாக்ஷம் விச்வரூபாயவை நமோநம:|| *(வடக்கு நோக்கி)* நர்மதாயை நம: ப்ராத:| நர்மதாயை நமோ நிசி| நமோஸ்து நர்மதே துப்யம் த்ராஹி மாம் விஷ ஸர்பத| ஜரத்காரோ: ஜரத்கார்வாம் ஸமுத்பந்தோ மஹாயசா:| அஸ்தீகஸ் ஸத்யஸந்தோ மாம் பந்நகேப்யோ அபிரக்ஷது| அபஸர்ப ஸர்ப பத்ரம் தே தூரம் கச்ச மஹாயச:| ஜநமேஜயஸ்ய யஜ்ஞாந்தே அஸ்தீக வசநம் ஸமரந்| *(என்று ப்ரார்த்தனை செய்யவும்)*

*(பிறகு காலை/ பகல் கிழக்காகவும்; மாலை மேற்காகவும் ஒரு நமஸ்காரம் செய்து)* நமஸ்ஸவித்ரே ஜகதேக சக்ஷுஷே ஜகத் ப்ரஸூதிஸ்திதி நாச ஹேதவே| த்ரயீமயாய த்ரிகுணாத்மதாரிணே விரிஞ்சி நாராயண சங்கராத்மநே த்யேயஸ்ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ நாராயண: ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: கேயூரவாந் மகர குண்டலவாந் கிரீட ஹாரி ஹிரண்மயவபு: த்ருத சங்கசக்ர: சங்கசக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுத| கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதம்| ஆகாசாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம்| ஸர்வதேவ நமஸ்கார: கேசவம் ப்ரதி கச்சதி| ஸ்ரீ கேசவம் ப்ரதி கச்சத்யோந்நம இதி|| *(என்று சொல்லவும்)*

*(பிறகு)* காயேந வாசா மநஸா இந்த்ரியைர்வா புத்யா ஆத்மநாவா ப்ரக்ருதே: ஸ்வபாவாத் கரோமி யத் யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்பயாமி ப்ராயச்சித்தாநி அசேஷாணி தப: கர்மாத்மகாநிவை| யாநிதேஷாம் அசேஷாணாம் க்ருஷ்ணாநுஸ்மரணம் பரம்| க்ருஷ்ண, க்ருஷ்ண, க்ருஷ்ண *(என்று அஞ்ஜலி செய்க)*

*(பிறகு ஜபம் செய்த இடத்தில் சிறிது ஜலம் மந்த்ரம் சொல்லி தெளிக்கவும்)* அத்யாநோ தேவஸவிதா: ப்ரஜாவத்ஸாவீஸ்ஸௌபகம்| பரா துஷ்வப்நியகும் ஸுவ| விஸ்வா நிதேவ ஸவித: | துரிதாநிபராஸுவ| யத் பத்ரம் தந்ம ஆஸுவ|| *(என்று தெளித்து ஜலத்தில் ஒரு பொட்டு ப்ரோக்ஷித்துக் கொள்ளவும்)*

ஓம்தத்ஸத் | க்ருஷ்ணார்பணமஸ்து ||



## 3. ப்ரம்ஹயஜ்ஞம்

*(இக்கர்மா தினசரி பகலில் மாத்யாந்ஹிகம் செய்தவுடன் செய்ய வேண்டும். ஸௌகர்யமில்லாதவர்கள் அமாவாஸை தர்பணத்தின் பிறகு/ ச்ராத்தம் முடித்த பிறகு செய்யலாம்)*

**தேவையானவை:–** *(சிறு சொம்பு தீர்த்தத்துடன், பஞ்சபாத்திரம் உத்தரணி, ஒரு தாம்பாளம். ஆசமநம் செய்து ஆரம்பிக்க)* சுக்லாம் ++ சாந்தயே| ப்ராணாயாமம்|

**ஸங்கல்பம்:–** மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் ப்ரம்ஹயஜ்ஞம் கரிஷ்யே. ப்ரம்ஹ யஜ்ஞேந யக்ஷ்யே| வித்யுதஸி வித்யமே பாப்மாநம் ருதாத் ஸத்யம் உபைமி| ஓம் பூ: தத்ஸ விதுர்வரேண்யம்| ஓம் புவ: பர்கோ தேவஸ்ய தீமஹி| ஓகும் ஸுவ: தியோயோந: ப்ரசோதயாத்| ஓம் பூ: தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி| ஓம் புவ: தியோயோந: ப்ரசோதயாத்| ஓகும் ஸுவ: தத்ஸ விதுர்வரேண்யம், பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோ நோந: ப்ரசோதயாத்| ஓம்பூர்புவஸ்ஸுவ: தத்ஸ விதுர்வரேண்யம், பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோ யோந: ப்ரசோதயாத்||

ஹரி: ஓம்| அக்நிமீளே புரோஹிதம் யஜ்ஞஸ்ய தேவம் ருத்விஜம்| ஹோதாரம் ரத்ந தாதமம். ஹரி: ஓம்||

ஹரி : ஓம்| இஷேத்வோர்ஜேத்வா வாயவஸ்தோ பாயவஸ்த தேவோவஸ்ஸவிதா ப்ரார்பயது ச்ரேஷ்டதமாய கர்மணே| ஹரி : ஓம்||

ஹரி: ஓம்| அக்ந ஆயாஹி வீதயே க்ருணாநோ ஹவ்யதாதயே| நிஹோதா ஸத்ஸி பர்ஹிஷி| ஹரி: ஓம்||

ஹரி: ஓம்| சந்நோ தேவீரபிஷ்டய ஆபோ பவந்து பீதயே| சம்யோரபிஸ்ரவந்து ந:| ஹரி: ஓம்||

ஸ்வஸ்தி ந இந்த்ரோ வ்ருத்தச்ரவா: ஸ்வஸ்தி ந: பூஷா விச்வவேதா: ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டநேமி: ஸ்வஸ்தி நோ ப்ரஹஸ்பதிர்ததாது||

பயப்ப்ருதிவ்யாம் பய ஒஷதீஷு பயோ திவ்யந்தரிக்ஷே பயோதாம்| பயஸ்வதீ: ப்ரதிச: ஸந்து மஹ்யம்||

விஷ்ணோ ரராடமஸி விஷ்ணோ: ப்ருஷ்டமஸி விஷ்ணோ: ச்ந்ப்த்ரேஸ்தோ விஷ்ணோ: ஸ்யூரஸி விஷ்ணோ: த்ருவமஸி வைஷ்ணமஸி விஷ்ணவேத்வா||

அக்நிர்தேவதா வாதோதேவதா ஸுர்யோதேவதா: சந்த்ரமாதேவதா வஸவோதேவதா ருத்ராதேவதா ஆதித்யா தேவதா விச்வேதேவாதேவதா மருதோ தேவதா பருஹஸ்பதி: தேவதா இந்த்ரோதேவதா வருணோதேவதா||

ஸத்யம் தபச்ரத்தாயாம்ஜுஹோமி|| *(என்று ஓர் உத்ரணி தீர்த்தத்தை எடுத்து தன்னை ஒரு சுற்று சுற்றி கீழே விடவும். இரண்டு கைகளையும் சேர்த்து கூப்பிக் கொண்டு)* ஓம் நமோ ப்ரம்ஹணே நமோ அஸ்த்வக்நயே நம: ப்ருதிவ்யை நம ஒஷதீப்ய: நமோ வாசே நமோ வாசஸ்பதயே நமோ விஷ்ணவே ப்ருஹதே கரோமி|| *(என்று மூன்று தரம் சொல்லவும்)*

வ்ருஷ்டிரஸி வ்ருச்சமே பாப்மாநம் ருதாத் ஸத்யமுபாகாம்| *(என்று ஜலத்தால் கைகளை மேலும் கீழும் அலம்பவும்)* தேவருஷி பித்ரு தர்பணம் கரிஷ்யே *(என்று சொல்லவும். பிறகு ஒரு உத்ரணி தீர்த்தம் வலது கையில் விட்டு நுனி விரல் வழியாக தீர்த்தம் தாம்பாளத்தில் விழும்படி விடவும்)*



ப்ரம்ஹாணம் தர்பயாமி| ப்ரஜாபதிம் தர்பயாமி| ப்ரஹஸ்பதிம் தர்பயாமி| அக்நிம் தர்பயாமி| வாயும் தர்பயாமி| ஸுர்யம் தர்பயாமி| சந்த்ரமஸம் தர்பயாமி| நக்ஷத்ராணி தர்பயாமி| இந்த்ரம் ராஜாநம் தர்பயாமி| யமம் ராஜாநம் தர்பயாமி| வருணம் ராஜாநம் தர்பயாமி| ஸோமம் ராஜாநம் தர்பயாமி| வைச்ரவணம் ராஜாநம் தர்பயாமி| வஸூம்ஸ்தர்பயாமி| ருத்ராம்ஸ்தர்பயாமி| ஆதித்யாம்ஸ்தர்பயாமி| விச்வாந்தேவாம்ஸ்தர்பயாமி| ஸாத்யாம்ஸ்தர்பயாமி| ருபூம்ஸ்தர்பயாமி| ப்ருகூம்ஸ்தர்பயாமி| மருத: தர்பயாமி| அதர்வணஸ்தர்பயாமி| அங்கிரஸஸ்தர்பயாமி| **(23)**

*(அடுத்து பூணூலை நிவீதி – தாவடம் (மாலையாக) போட்டுக்கொண்டு தீர்த்தம் வலதுகை சுண்டுவிரல் அடிபாகம் வழியாக தாம்பாளத்தில் விழும்படி விடவும்)*

விச்வாமித்ரம் தர்பயாமி| ஜமதக்நிம் தர்பயாமி| பரத்வாஜம் தர்பயாமி| கௌதமம் தர்பயாமி| அத்ரிம் தர்பயாமி| வஸிஷ்டம் தர்பயாமி| அருந்ததீம் தர்பயாமி| காச்யபம் தர்பயாமி| க்ருஷ்ணத்வைபாயநம் தர்ப்பயாமி| ஜாதூகர்ண்யம் தர்பயாமி| தருக்ஷம் தர்பயாமி| த்ருணபிந்தும் தர்பயாமி| வர்மிணம் தர்பயாமி| வரூதிநம் தர்பயாமி| வாஜிநம் தர்பயாமி| வாஜச்ரவஸம் தர்பயாமி| ஸத்யச்ரவஸம் தர்பயாமி| ஸுச்ரவஸம் தர்பயாமி| ஸுதஸ்ரவஸம் தர்பயாமி| ஸோமசுஷ்மாயணம் தர்பயமாமி| ஸத்வவதம் தர்பயாமி| ப்ருஹதுக்தம் தர்பயாமி| வாமதேவம் தர்பயாமி| வாஜிரத்நம் தர்பயாமி| ஹர்யஜ்வாயநம் தர்பயாமி| உதமயம் தர்பயாமி| கௌதமம் தர்பயாமி| ருணஞ்ஜயம் தர்பயாமி| ருதஞ்ஜயம்

தர்பயாமி| க்ருதஞ்ஜயம் தர்பயாமி| தநஞ்ஜயம் தர்ப்பயாமி| பப்ரும் தர்ப்பயாமி| த்ரயருணம் தர்ப்பயாமி| த்ரிவர்ஷம் தர்பயாமி| த்ரிதாதும் தர்பயாமி| சீக்ரம் தர்பயாமி| ஹவ்யவாஹநம் தர்பயாமி| பராசரம் தர்பயாமி| விஷ்ணும் தர்பயாமி| ருத்ரம் தர்பயாமி| ஸ்கந்தம் தர்பயாமி| காசீச்வரம் தர்பயாமி| ஜ்வரம்தர்பயாமி| தர்மம் தர்பயாமி| அர்த்தம் தர்பயாமி| காமம் தர்பயாமி| க்ரோதம் தர்பயாமி| வஸிஷ்டம் தர்பயாமி| இந்த்ரம் தர்பயாமி| த்வஷ்டாரம் தர்பயாமி| கர்த்தாரம் தர்பயாமி| தர்த்தாரம் தர்பயாமி| தாதாரம் தர்பயாமி| ம்ருத்யும் தர்பயாமி| ஸவிதாரம் தர்பயாமி| காயத்ரீம் தர்பயாமி| ஸாவித்ரீம் தர்பயாமி| ஸரஸ்வதீம் தர்பயாமி|

*(அடுத்து வரும் ஐந்து தர்பணமும் கையிலுள்ள ஜலம் முழங்கை வழியாக விழும்படி விட வேண்டும்)* ப்ரஜாபதிம் காண்டருஷிம் தர்பயாமி| ஸோமம் காண்டருஷிம் தர்பயாமி| அக்நிம் காண்டருஷிம் தர்பயாமி| விச்வாந்தேவாந் காண்டருஷிம் தர்பயாமி| ஸ்வயம்புவம் காண்டருஷிம் தர்பயாமி||

*(மேலே முன்போல – தேவதீர்த்தமாக நுனி விரல்)* ஸதஸஸ்பதிம் தர்பயாமி| ருக்வேதம் தர்பயாமி| யஜுர்வேதம் தர்பயாமி| ஸாமவேதம் தர்பயாமி| அதர்வவேதம் தர்பயாமி| இதிஹாஸ புராணம் தர்பயாமி| கல்பம் தர்பயாமி|| (70)

*(பிறகு பூணூலை இடமாக (ப்ராசீநாவீதி) போட்டுக்கொண்டு தீர்த்தம் கட்டைவிரல் நுனி வழியாக விழும்படி மரித்து விடவேண்டும்)* வைசம்பாயநம் தர்பயாமி| பலிங்கும் தர்பயாமி| தித்திரம் தர்பயாமி| உகம் தர்பயாமி| அகஸ்த்யம் தர்பயாமி| கௌண்டிந்யம் தர்பயாமி| பதகாரம் தர்பயாமி| வ்ருத்திகாரம் தர்பயாமி| ஸூத்ரகாராம்ஸ் தர்பயாமி| சத்யாஷாடாம்ஸ் தர்பயாமி| ப்ரவசனகர்தூம்ஸ் தர்பயாமி|



ஆசார்யாம்ஸ் தர்பயாமி| வாநப்ரஸ்தாம்ஸ் தர்பயாமி| ருஷீம்ஸ் தர்பயாமி| ஊர்த்வரேதஸஸ் தர்பயாமி| ஏகபத்நீஸ் தர்பயாமி| *(இத்துடன் (ஜீவ பித்ருகர்) தகப்பனார் உள்ளவர்கள் நிறுத்தி பூணூலை உபவீதியாக மாற்றிக்கொண்டு ஆசமனம் செய்து முடித்துக்கொள்ளவும்)*

*(மற்றவர் முன்போல தொடரவும்)* பித்ரூந்ஸ்வதாநமஸ் தர்பயாமி| பிதாமஹாந் ஸ்வதாநமஸ் தர்பயாமி| ப்ரபிதாமஹாந் ஸ்வதாநமஸ் தர்பயாமி| *(தாயார் இல்லாதவர்)* மாத்ரூஸ் ஸ்வதாநமஸ் தர்பயாமி| பிதாமஹீஸ் ஸ்வாதநமஸ் தர்பயாமி| ப்ரபீதாமஹீஸ் ஸ்வதாநமஸ் தர்பயாமி| *(தாயார் உள்ளவர்)* பிதாமஹீஸ் ஸ்வதாநமஸ் தர்பயாமி| பிது: பிதாமஹீஸ் ஸ்வதாநமஸ் தர்பயாமி| பிது: ப்ரபிதாமஹீஸ் ஸ்வதாநமஸ் தர்பயாமி| *(எல்லோரும்)* மாதாமஹாந் ஸ்வதாநமஸ் தர்பயாமி| மாது:பிதாமஹாந் ஸ்வதாநமஸ் தர்பயாமி| மாது:ப்ரபிதாமஹாந் ஸ்வதாநமஸ் தர்பயாமி| மாதாமஹீ ஸ்வதாநமஸ் தர்பயாமி| மாது:பிதாமஹீ ஸ்வதாநமஸ் தர்பயாமி| மாது: ப்ரபிதாமஹீ ஸ்வதாநமஸ் தர்பயாமி| ஜ்ஞாதாஜ்ஞாத வர்கத்வய பித்ருந்ஸ் ஸ்வதாநமஸ் தர்பயாமி| ஊர்ஜம் வஹந்தீ: அம்ருதம் க்ருதம் பய: கீலாலம் பரிஸ்ருதம் ஸ்வதாஸ்த தர்பயதமே பித்ருந் || *(என்று தர்பணம் பூர்த்தி. பூணூல்–உபவீதி (வலமாக) பிறகு)* ஹகும்ஸச்சுசிஷத் வஸூரந்தரிக்ஷஸத்ஹோதா வேதிஷததி திர்துரோணஸத்| ந்ருஷத்வ ரஸத்ருதஸ்த் வ்யோம ஸதப்ஜா கோஜா ருதஜா அத்ரிஜா ருதம் ப்ருஹத்|| *(என்று சொல்லவும். ஆசமனம் செய்து முடித்துக் கொள்ளவும்)*

விச்வ ஆயவ:। ஜாதவேத: பவித்ரவத்। பவித்ரேண புநாஹிமா। சுக்ரேண தேவ தீத்யத்। அக்நே க்ருத்வா க்ரதூகும்ரநு। யத்தே பவித்ர மர்சிஷி। அக்நே விதத மந்தரா। ப்ரம்ஹ தேந புநீமஹே। உபாப்யாம் தேவஸவித:। பவித்ரேண ஸவேநச। இதம் ப்ரம்ஹ புநீமஹே। வைச்வதேவீ புநதீ தேவ்யாகாத்। யஸ்யை பஹ்வீ ஸ்தநுவோ வீத ப்ருஷ்டா:। தயா மதந்தஸ் ஸதமாத்யேஷு। வயக்குஸ்யாம பதயோ ரயீணாம்। வைச்வாநரோ ரச்மிபி: மா புநாது। வாத: ப்ராணே நேக்ஷிரோ மயோ பூ:। த்யாவா ப்ருத்வீ பயஸா பயோபி: ருதாவரீ யஜ்ஞியே மா புநீதாம்। ப்ருஹத்பி: ஸவிதஸ்த்ருபி: வரிஷிஷ்டை: தேவ மந்வபி:। அக்நே தக்ஷை: புநாஹிமா। யே ந தேவா அபுநத। யே நாபோ திவ்யம் கச:। தேந திவ்யேந ப்ரம்ஹணா। இதம் ப்ரம்ஹ புநீமஹே। ய: பாவமாநீ: அத்யேதீ। ருஷிபி: ஸம்ப்ருதம் ரஸம்। ஸர்வகும் ஸபூதமச்நாதி। ஸ்வதிதம் மாதரிச்வநா। பாவமாநீ: யோ அத்யேதி। ருஷிபி: ஸம்ப்ருதகும் ரஸம்। தஸ்மை ஸரஸ்வதீ துஹே। க்ஷீரகும் ஸர்பிர் மதூதகம்। பவமாநீ: ஸ்வ ஸ்த்யயநீ: ஸுதுகாஹி பயஸ்வதீ:। ருஷிபி: ஸம்ப்ருதோ ரஸ:। ப்ராம்ஹணேஷ்வம்ருதகும் ஹிதம்। பாவமாநீ: திசந்து ந:। இமம் லோகமதோ அமும்। காமாந்த் ஸமர்த்தயந்து ந:। தேவீர் தேவை: ஸமாப்ருதா:। பாவமாநீ: ஸ்வஸத்யயநீ:। ஸுதுகாஹி க்ருதச்சுத:। ருஷிபி: ஸம்ப்ருதோ ரஸ:। ப்ராம்ஹணேஷ்வம்ருதகும் ஹிதம்। யேந தேவா: பவித்ரேண। ஆத்மாநம் புநதே ஸதா। தேந ஸஹஸ்ர தாரேண। பாவமாந்ய: புநந்துமா। ப்ராஜாபத்யம் பவித்ரம்। சதோத்யாமகும் ஹிரண்மயம்। தேந ப்ரம்ஹவிதோ வயம்। பூதம் ப்ரம்ஹ புநீமஹே। இந்த்ரஸ்ஸுநீதி ஸஹமா புநாது। ஸோமஸ்ஸ்வஸ்த்யா வருணஸ்ஸமீச்யா। யமோ ராஜா ப்ரம்ருணாபி: புநாதுமா। ஜாதவேதா மோர்ஜ்யந்த்யா புநாது। பூர்புவஸ்ஸுவ:।।



தச்சம்யோரா வ்ருணீமஹே। காதும் யஜ்ஞாய। காதும் யஜ்ஞபதயே। தைவீஸ்ஸ்வஸ்திரஸ்துந:। ஸ்வஸ்திர் மாநுஷேப்ய: ஊர்த்வம் ஜிகாது பேஷஜம்। சந்தோ அஸ்து த்விபதே। சம்சதுஷ்பதே।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:।।

**மேலே வருண பூஜை-யதாஸ்தானம்:-** *(சிறிது அக்ஷதை எடுத்து)* வருணாய நம: ஸகலாராதநை: ஸ்வர்ச்சிதம்। *(என்று கும்பத்தின் மீது போடவும்)* தத்வாயாமி ப்ரம்ஹணா வந்தமாந:। ததாசாஸ்தே யஜமாநோ ஹவிர்பி:। அஹேடமாநோ வருணேஹபோதி உருசகும்ஸமாந ஆயு: ப்ரமோஷீ: *(என்று அக்ஷதை போட்டு தட்டுடன் கும்பத்தை வடக்குபுறம்)* சோபநார்த்தே க்ஷேமாய புநரா கமநாசாயச। *(என்று சொல்லி நகர்த்தி கும்ப ஜலத்தால் கர்த்தா, போக்தாக்கள், அருகில் உள்ள சாமான்கள், ச்ராத்த இடம், சமையல் இடம் முதலியவற்றை புரோக்ஷிக்கவும்)* த்ருபதா திவேந்முமுசாந:। ஸ்விந்நஸ்நாத் ஸ்வீமலாதிவ। பூதம் பவித்ரேணேவாஜ்யம்। ஆபச்சுந்தந்துமைநஸ:।। *(என்று இங்கு தீர்த்த ப்ராசனம் கிடையாது)*

*(அடுத்து ப்ரம்ஹசாரியானால் ஸமிதாதாநமும்: க்ரஹஸ்தரானால் அக்நி ஸந்தாநம்–ஔபாஸநமும் செய்யவேண்டும்)*

## 6-2. ஸமிதாதாநம்

*(இந்த கர்மா பூணூல் போட்டதிலிருந்து காலை, மாலை இரு வேளையும் ப்ரம்ஹசாரி செய்யவேண்டியது. ச்ராத்த தினத்தன்று மிகவும் அவசியம்)*

*(எதிரே அக்நிகுண்டத்தில் அக்நி வைத்துக்கொண்டு)* சுக்லாம் ++ சாந்தயே। ஓம் பூ ++ ஸுவரரோம்। ஸங்கல்பம்:- மமோபாத்த

ஸமஸ்த துரித க்ஷயத்வார ஸ்ரீ பரமேச்வராஜ்ஞயா பரமேச்வர ப்ரீத்யர்த்தம் ப்ராத:/ ஸாயம் ஸமிதாதாநம் கரிஷ்யே||

**ப்ரார்த்தனை:–** யதாஹ தத் வஸவோ கௌர்யஞ்சித் பதிக்ஷிதாம் அமுஞ்சதா யஜத்ரா:| ஏவாத்வமஸ்மத் ப்ரமுஞ்சாவ்யம்ஹ: ப்ராதார்யக்நே ப்ரதராந்ந ஆயு:|| *(என்று அக்நி – பரிஸமுஹ்ய – பரிஸ்தீர்ணம் போட்டு பரிஷேசநம் – கையில் தீர்த்தம் எடுத்து அக்நி குண்டத்தை ஒட்டி தென்புறத்தில் மேற்கிலிருந்து கிழக்கு முகமாக)* அதிதே அநுமந்யஸ்வ| *(என்று சொல்லி கோடாக விடவும். அதேபோல அக்நி குண்டத்தின் மேற்கு புறத்தில் தெற்கிலிருந்து வடக்காக)* அநுமதே அநுமந்யஸ்வ| *(என்று சொல்லிவிடவும். அடுத்து அக்நிகுண்டனத்தின் வடபுறம் மேற்கிலிருந்து கிழக்காக)* ஸரஸ்வதே அநுமந்யஸ்வ| *(என்று விடவும் அடுத்து)* தேவ ஸவித: ப்ரஸுவ *(என்று அக்நியை சுற்றி பரிஷேசநம் செய்யவும். பிறகு மந்த்ரம் சொல்லி ஒவ்வொரு ஸமித்தாக அக்நி ஜ்வாலையில் கொடுக்கவும்)* ஓம்பூஸ்ஸ்வாஹா| அக்நய இதம் ந மம| **1.** புவஸ்ஸ்வாஹா| வாயவ இதம் ந மம|| **2.** ஸுவஸ்ஸ்வாஹா| ஸுர்யாய இதம் ந மம|| **3.** ஓம் பூர்புவஸ்ஸுவஸ்ஸ்வாஹா| ப்ரஜாபதய இதம் ந மம|| **4.** ஏஷாதே அக்நே ஸமித்தயா வர்த்தஸ்வச ஆசப்யாயஸ்வ வர்த்திஷீ மஹிச வயம் ஆசப்யாஸிஷீமஹிஸ்வாஹா| அக்நய இதம் ந மம|| **5.** மேதாம் ம இந்த்ரோ ததாது மேதாம் தேவீ ஸரஸ்வதீ| மேதாம் மே அச்விநௌ உபாவாதத்தாம் புஷ்கர ஸ்ரஜௌ ஸ்வாஹா| இந்த்ராய ஸரஸ்வத்யா அச்விப்யாம் இதம் ந மம|| **6.** அப்ஸராஸுச யா மேதா கந்தர்வேஷுச யந் மந:| தைவீம் மேதா மநுஷ்யஜா ஸாமாம் மேதா ஸுரபி: ஜுஷதாகும் ஸ்வாஹா| மேதாயா இதம் ந மம|| **7.** ஆமாம் மேதா ஸுரபி: விச்வரூபா: ஹிரண்ய வர்ணா ஜகதீ ஜகம்யா| ஊர்ஜஸ்வதீ பயஸா பிந்வமாநா ஸாமாம் மேதா ஸுப்ரதீகா ஜுஷதாகும் ஸ்வாஹா| மேதாயா இதம் ந மம| **8.**



*(பிறகு முன்போல)* யதாஹ தத்வஸவோ கௌர்யஞ்சித் பதிஷிதாம் அமுஞ்சதா யஜத்ரா:| ஏவாத்வம் அஸ்மத் ப்ரமுஞ்சாவ்யகும்ஹ: ப்ராதார்யக்நே ப்ரதராந்ந ஆயு:| *(என்று பரிஸமுஹ்ய பரிசேஷசநம் – முன்போல்)* அதிதே அந்வமக்குஸ்தா:| அநுமதே அந்வமக்குஸ்தா:| ஸரஸ்வதே அந்வமக்குஸ்தா:| தேவஸவித: ப்ராஸாவீ:| *(பிறகு ஒரு ஸமித்)* ஸ்வாஹா *(என்று வைக்கவும்)*

**ப்ரார்த்தனை:–** யத்தே அக்நே தேஜஸ்தேநாஹந்தேஜஸ்வீ பூயாஸம்| யத்தே அக்நே வர்ச்சஸ்தேநாஹம் வர்ச்சஸ்வீ பூயாஸம்| யத்தே அக்நே ஹரஸ்தே நாஹம் ஹரஸ்வீ பூயாஸம்| மயிமேதாம் மயிப்ரஜாம் மய்யக்நி: தேஜோ ததாது| மயிமேதாம் மயி ப்ரஜாம் மயி இந்த்ர இந்த்ரியந்ததாது| மயிமேதாம் மயிப்ரஜாம் மயிஸுர்யோ ப்ராஜோ ததாது| அக்நயே நம:||


**ரக்ஷை தரிக்க:–** *(இங்கு கவனிக்க வேண்டியது. ச்ராத்த தினம் ஸமிதாதாநம் செய்யும் போது ரக்ஷை ச்ராத்த முடிவில் தரிக்க வேண்டும்)* மாநஸ்தோகே தநயே மாந ஆயுஷி மாநோ கோஷு மாநோ அச்வேஷு ரீரிஷ:| வீராந்மாநோ ருத்ர பாமிதோ வதீ: ஹவிஷ்மந்தோ நமஸா விதேமதே| மோதாவீ பூயாஸம்| *(நெற்றி)* தேஜஸ்வீ பூயாஸம்| *(ஹ்ருதயம்)* ஓஜஸ்வீ பூயாஸம்| *(கண்டம்)* வர்சஸ்வீ பூயாஸம்| *(வலது தோள்)* ப்ரம்ஹவர்சஸீ பூயாஸம்| *(இடது தோள்)* ஆயுஷ்மாந் பூயாஸம்| *(கண்டத்துக்கு மேல்)* அந்நாதோ பூயாஸம்| *(பின் கழுத்து)* ஸ்வஸ்தி பூயாஸம்| *(மேல் நெற்றி)* ஸ்வஸ்தி ச்ரத்தாம் யச: ப்ரஜ்ஞாம் வித்யாம் புத்திம் ஸ்ரீயம்பலம்| ஆயுஷ்யம் தேஜ ஆரோக்யம் தேஹிமே ஹவ்ய வாஹந| தேஹிமே ஹவ்ய வாஹந ஓம் நம இதி||

மந்த்ரஹீநம் க்ரியாஹீநம் பக்திஹீநம் ஹுதாசந| யத்துதம்து மயா தேவ பரிபூர்ணம் ததஸ்துதே| ப்ராயச்சித்தாநி அசேஷாணி தப:

கர்மாத்மகாநிவை। யாநிதேஷாம் அசேஷாணாம் க்ருஷ்ணா அநுஸ்மரணம் பரம்। ஸ்ரீக்ருஷ்ணாய நம:। அபிவாதநம்। *(நமஸ்காரம்)*

**6–3. அக்நி ஸந்தாநம்,**

*(விவாஹமானவர்கள் ச்ராத்த தினம் ஒளபாஸநம் செய்வதற்கு*




*முன் இதை செய்யவேண்டும். தினம் ஒளபாஸநம் செய்பவர்களுக்கு இது இல்லை.)*

*படத்தில் கண்டபடி அக்நி ப்ரதிஷ்டை செய்து கொள்ளவும்.*

**பரிஸ்தரணம்:–**

*(மேலே படத்தில் காட்டியபடி முதலில் அக்நிகுண்டத்திற்கு கிழக்கில் வடக்கு நுனியாக 4 தர்பங்களை போடவும். பிறகு தெற்கில் கிழக்கு நுனியாகவும், மேற்கில் வடக்கு நுனியாகவும் வடக்கில் கிழக்கு நுனியாகவும் முன்போல் 4 தர்பங்களை*



*போடவும்)*

**குறிப்பு:–** *(தெற்கில் உள்ள தர்பங்கள் கிழக்கு மேற்கு தர்பங்களுக்கு மேலாகவும் வடக்கில் உள்ளது கிழக்கு மேற்கு தர்பங்களுக்கு கீழாகவும் இருக்கவேண்டும்)*

**பாத்ர ஸாதனம்:–** *(படத்தை பார்த்துக் கொள்ளவும்)*

*(பரிஸ்தரணத்திற்கு வடக்கில் சில தர்பங்களை கிழக்கு நுனியாக போடவும். அவை மீது மேற்கு கோடியில் ப்ராதான தர்வி பொரசு/ மா/ அத்தி இலை – பெரியது வடக்கு நுனியாக கவிழ்த்து வைக்கவும். அதற்கு கிழக்கே ப்ரோக்ஷணிபாத்ரம் கவிழ்த்து வைக்கப்படவேண்டும். அதன் கிழக்கே இதர தர்வி – சிறிய இலை வைக்கப்படவேண்டும். அக்நிகுண்டத்தின் கிழக்கே பரிஸ்தரணத்திற்கு வெளியே ப்ராக் தோயம் – ஒரு கிண்ணத்தில் தீர்த்தம் விட்டு வைக்கவும்)*

**அக்நி ப்ரதிஷ்டை:–**

*(ஹோமம் செய்யுமிடத்தில் – அக்நிகுண்டத்தில் கீழே படத்தில் காட்டியபடி ஸமித்தால் மூன்று கோடுகள் இழுக்கவேண்டும். 1. தெற்கு பக்கத்தில் மேற்கிலிருந்து கிழக்காக 2. அதற்கு வடக்கில் (நடுவில்) மேற்கிலிருந்து கிழக்காக.*

